**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.152/2025**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw2/Pw2 |
| Name | : சித்ராகன்னியப்பன் |
| Father/Husband's Name | : கண்ணன் |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 41 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03.06.2026.

**முதல் விசாரணை:**

நான் தற்போது செங்கல்பட்டு சரகம் கூடலூர் பீட் வன காப்பாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 10.07.2023 அன்று காலை 8 மணியளவில் நானும், பரனூர் பீட் வனகாப்பாளர் குமார், சிங்கபெருமாள் கோயில் பீட் வனகாவலர் கண்ணன் மூன்று பேரும் திரு.மணிவண்ணன் வனவர் அவர்களின் உத்தரவின் பேரில் அஞ்சூர் காப்பு காடு தணிக்கை செய்யும் போது எல்லைக்கல் 46 மற்றும் 47 இடையே ஸ்ரீவீர ஆஞ்சநேயர் கோயில் புதுப்பிக்கும் பணிக்காக மணல், செங்கல், ஜல்லி ஆகியவை அந்த இடத்தில் இருந்தது. கோயில் புதுப்பிக்கும் பணி முன்னிட்டு சுவரிகள் சிமெண்ட்டுகள் கொண்டு பூசப்பட்டிருந்தது. படிக்கட்டுகள் கட்டப்பட்டிருந்தது. அதனை விசாரித்த போது கோயில் பூசாரி பார்த்தசாரதி த.பெ. எத்திராஜ் சுமார் வயது 41 அனுமந்தபுரம் கிராமம், தர்காஸ் என்பவர் நன்கொடை வசூல் செய்து கோயிலை புதுப்பித்த விவரம் தெரிய வந்தது. அவரை விசாரிப்பதற்காக ஊருக்குள் செல்லும் போது

அவர் தலைமறைவு ஆகிவிட்டார். சம்பவ இடத்தில் இருந்த வனவர் மணிவண்ணன் 2 பிளாஸ்டிக் பாண்டு, 2 பிளாஸ்டிக் டிரம் மற்றும் 1 மண்வெட்டி மகசர் தயார் செய்து கைப்பற்றினார். என்னிடம் காட்டபப்படும் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த மகசர் **அதசா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

1. நான் 07.06.2023 அன்று சிங்கபெருமாள் கோயில் வன காப்பாளராக பணியில் சேர்ந்தேன். நான் பணியில் சேர்ந்த ஒரு மாதம் கழிந்து இந்த வழக்கு விசாரணை செய்யப்பட்டது. இதற்கு முன்பாக இந்த வழக்கில் சம்பவ இடத்திற்கு உட்பட்ட இடத்தில் நான் வன காப்பாளராக பணியில் இல்லை. நான் சம்பவ இடம் சென்று பார்ப்பதற்கு முன்பு அந்த கோயில் எவ்வாறு இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படம் கலர் நகல் என்றால் சரிதான். செல்போனில் இருந்து எடுக்கப்பட்டது. அந்த புகைப்படத்தில் குற்ற எண் MISC.OR.83/2023 எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த புகைப்படத்தில் கோயில் விவரம் எதுவும் இல்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரி தான் அந்த கோயிலின் பூசாரி என்று எவ்வாறு தெரிய வந்தது என்றால் நாங்கள் மற்றும் வனவர் ஊருக்குள் சென்று விசாரித்த போது ஆஜர் எதிரி தான் பூசாரி என்று சொன்னார்கள்.

2. நான் நேரடியாக விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். நான் யார் யாரை விசாரித்தேன் என்றால் அனுமந்தபுரம் கிராம மக்கள். யார் யார் என்று குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் அவ்வாறு குறிப்பிட்டு சொல்ல முடியாது. நான் விசாரித்த நபர்களின் பெயர் முகவரி, வயது ஆகியவற்றையும் மற்றும் அவர்களிடம் விசாரித்த வாக்குமூலத்தையும் வழக்கு கோப்புகளுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ஆஜர் எதிரி நன்கொடை வாங்கியதற்கு ஆவணம் ஏதேனும் பெறப்பட்டதா என்றால் இல்லை. எதிரி இந்த கோயிலின்

பூசாரி இல்லை என்றாலும், அவர் யாரிடமும் நன்கொடை வசூலிக்கவில்லை என்றாலும் சரியல்ல.

3. அதனால் தான் ஆஜர் எதிரிதான் அந்த கோயிலின் காப்பாளர் என்பதற்கு ஆவணமும் மற்றும் நன்கொடை வசூலித்ததற்கு எந்த ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் இருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பொருட்கள் வழக்கிற்காக பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதனால் தான் கைப்பற்றப்பட்ட பொருட்கள் அலுவலகத்தில் வைத்து எடுக்கப்பட்ட புகைப்படம்(கலர் ஜெராக்ஸ்) என்றால் சரியல்ல. அந்த கோயிலுக்கு பாதுகாவலர் மற்றும் அறங்காவலர் என்று யாராவது இருக்கிறார்களா என்றால் விசாரித்த போது ஆஜர் எதிரி தான் எல்லாம் என்று சொன்னார்கள். எதிரி தான் எல்லாம் என்று சொன்ன நபரை யார் என்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை.

4. என்னுடைய தினசரி பணி என்னவென்றால் வனத்தை சுற்றி பார்த்து கொள்வதும் மற்றும் தணிக்கை செய்வதும் ஆகும். எங்களுடைய பணிநிமத்தமாக நாங்கள் எவ்வளவு தூரம் கொடுக்கப்பட்டது என்றால் ஒரு நாளைக்கு 3 1/2–4 கி.மீ தூரம் இருக்கிறது. வன காப்பாளர் என்ற முறையில் எனது கட்டுப்பாட்டில் மூன்று காப்புக்காடுகள் திருத்தேரி, செங்குன்றம் மற்றும் அஞ்சூர் காப்புக்காடு ஆகும். அதன் மொத்த விஸ்திரனம் சுமார் 1300 ெ ஹக்டர் இருக்கும். மூன்று காடுகளையும் சுற்றி பார்ப்பதற்கு எவ்வளவு நேரம் ஆகும் என்றால் நடந்து சென்று பார்ப்பதால் ஒரு வார காலம் ஆகும். ஒவ்வொரு நாளும் நடந்து தான் காப்புக் காட்டை சுற்றி பார்ப்போம் என்றால் சரிதான். நான் ஒரு மாத காலம் பணியில் இருந்த காலத்தில் வழக்கு சம்பவ இடத்திற்கு எத்தனை முறை சென்றிருக்கிறேன் என்றால் வழக்கு சம்பவ நாள் தவிர்த்து நான்அந்த இடத்திற்கு சென்றதில்லை. காப்பு காட்டை சுற்றி பார்ப்பதற்கு தினமும் வனவர் மற்றும் வன காவலர் மற்றும் நான் சேர்ந்து தான் செல்வோம்.

5.சம்பவ இடத்திற்கு செல்லும் போது என்னுடன் வந்த நான்காவது நபர் பரனூர் பீட் வன காப்பாளர் குமார். எத்தனை மணிக்கு எங்கிருந்து சம்பவ இடத்திற்கு

சென்றோம் என்றால் வனசரகர் அலுவலகம், செங்கல்பட்டு காலை சுமார் 7.30 மணியளவில் கிளம்பினோம். நான் சம்பவ இடத்திற்கு செல்வதற்கு வனத்துறையின் வாகனத்தை எடுத்து சென்றோமா என்றால் இல்லை. சொந்த வாகனத்தில் சென்றோம். சம்பவ தேதியன்று எதற்காக வாகனத்தில் சென்றோம் என்றால் எப்போதும் வாகனத்தில் சென்று காப்புக் காட்டிற்க வெளியே வாகனத்தை நிறுத்திவிட்டு காப்புக்காட்டிற்குள் நடந்து செல்வோம்.

6. நான் எந்த இடத்தில் வண்டியை நிறுத்தி விட்டு காப்புக் காட்டிற்கு சென்றோம் என்றால் துப்பாக்கி சுடும் பயிற்சி செய்யும் இடத்தில் வாகனத்தை நிறுத்தி விட்டு சென்றோம். அந்த துப்பாக்கி சுடும் பயிற்சி செய்யும் இடம் காட்டிற்குள் இருக்கிறதா என்றால் அந்த இடம் பாதி காப்புக் காட்டு எல்லைக்குள்ளும் மீதிபாதி வெளியே இருக்கும். அந்த வெளியே இருக்கும் இடம் அனுமந்தபுரம் கிராமம். நாங்கள் வாகனத்தை நிறுத்திய இடத்தில் இருந்து சம்பவ இடமான கோயில் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் ஒரு கி.மீ தூரம் இருக்கும். சொன்ன தேதி மற்றும் நேரத்தில் சம்பவ இடத்திற்கு செல்வதற்கு நான் சொல்வது போல் காலை 8 மணியளவில் சமப்வ இடம் செல்ல முடியாது, தற்போது வழக்கிற்காக சம்பவ இடத்திற்கு காலை 8 மணியளவில் சென்றதாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7. கைப்பற்றப்பட்ட பொருளை எந்த தேதியில் எந்த நாளில் எடுத்து வந்தார்கள் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. ஜீப் எடுத்து சென்று பொருட்களை எடுத்து வந்தார்கள். எந்த தேதியில் யார் ஜீப்பை எடுத்து சென்றார்கள் என்றால் தேதி நேரம் ஞாபகம் இல்லை. யார் எடுத்து வந்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை. எத்தனை நாட்கள் கழித்து கைப்பற்றப்பட்ட பொருட்களை எடுத்து வந்தார்கள் என்றால் மறுநாள் எடுத்து வந்தார்கள். யார் எடுத்து வந்தாரகள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. எனது அலுவலகத்தில் சுரேஷ் மற்றும் சதீஷ் என்று இரு ஓட்டுநர்கள் இருக்கிறார்கள். அவர்களில் யார் எடுத்து வந்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. எனது மேல் அதிகாரியின் உத்தரவின் பேரில் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சொன்ன

தேதியில் சொன்ன நேரத்தில் சம்பவ இடம் சென்றதாகவும் சம்பவ சாட்சியாக இருந்ததாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது அன்றாட பணி குறித்து நாட்குறிப்பில் குறிப்பு வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை நாங்கள் எழுதி வார இறுதியில் வன சரக அலுவலரிடம் ஒப்படைப்போம்.

மறுவிசாரணை இல்லை

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu